TNTAM/25/A3638

# காவல் விரைவு செய்தி

நீதி வெல்லும்

தமிழ் மாத இதழ்


| Volume: 1 | Issue: 6 | April 2026 | 8 Pages | Rs. 10/- |
|---|---|---|---|---|
| மலர் 1 | இதழ் 6 | ஏப்ரல் 2026 | 8 பக்கம் | ரூ. 10/- |


### சென்னை இணையவழி குற்றப்பிரிவு தலைமையகம் சார்பில்

## ஜனநாயக செயல்முறையை பாதுகாக்க இணையவழி குற்றப்பிரிவு தேர்தல் விழிப்புணர்வு வீடியோ வெளியீடு

சென்னை, ஏப்ரல்

வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் தவறான தகவல்கள் இல்லாத டிஜிட்டல் சூழலை உறுதி செய்வதற்காக இணையவழி குற்றப்பிரிவு (Cyber Crime Wing) முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி, தேர்தல் விழிப்புணர்வு வீடியோவை வெளியிட்டுள்ளது.

இந்த முன்னெச்சரிக்கை முயற்சியின் ஒரு பகுதியாக, தேர்தல் காலங்களில் ஏற்படும் புதிய சைபர் அச்சுறுத்தல்கள், குறிப்பாக பிஷிங் லிங்குகள் மற்றும் தவறான தகவல் பரவல் போன்றவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வீடியோவை இணையவழி குற்றப்பிரிவு தலைமை இயக்குநர் டாக்டர். சந்தீப் மித்தல், இ.கா.ப., அவர்கள் வெளியிட்டார்.

இந்நிகழ்வில் காவல் கண்காணிப்பாளர் திருமதி. ஷஹ்நாஸ், இ.கா.ப., மற்றும் காவல் கண்காணிப்பாளர் திருமதி. மீனாட்சி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த வீடியோ, சந்தேகமான ஆன்லைன் உள்ளடக்கங்களை அடையாளம் காணுதல், சரிபார்த்தல் மற்றும் புகாரளித்தல் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கிறது. இதற்கு இணையாக, இணை தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஸ்ருதாஞ்ஜய் நாராயணன், இ.ஆ.ப., அவர்கள், இணையவழி குற்றப்பிரிவு மற்றும் HDFC வங்கி ஆகியவற்றுடன் இணைந்து “எந்த தேர்தல் செய்தியையும் கிளிக் செய்வதற்கு முன் சிந்தியுங்கள்” என்ற விழிப்புணர்வு போஸ்டர்களையும், பொதுமக்கள் தொடர்பு இயக்கத்தையும் தொடங்கிவைத்தார்.

இந்த விழிப்புணர்வு தொடக்க நிகழ்வில் இணையவழி குற்றப்பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தி காவல் கண்காணிப்பாளர்கள் திருமதி. ஷஹ்நாஸ், இ.கா.ப., மற்றும் திருமதி. மீனாட்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த போஸ்டர்கள், தேர்தல் தொடர்பான புதுப்பிப்புகள், பரிசுகள் அல்லது அவசர தகவல்கள் எனத் தோற்றமளிக்கும் அறியப்படாத அல்லது தீங்கிழைக்கும் லிங்குகளை கிளிக் செய்வதில் எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்களை எச்சரிக்கின்றன.

புகாரளிக்கும் முறைகள் மற்றும் உதவி எண்கள் குறித்து மக்களுக்கு விளக்குவதோடு, தேர்தல் தொடர்பான உண்மையான தகவல்களை பெற சரியான வழிகளைப் பற்றியும் வழிகாட்டுகிறது.

மேலும், தேர்தல் தொடர்பான தவறான தகவல்கள், வெறுப்பு பேச்சு மற்றும் சட்டவிரோத ஆன்லைன் செயல்பாடுகளை கண்டறிந்து தடுக்க இணையவழி குற்றப்பிரிவு தலைமையகத்தில் தேர்தல் பிரிவுஅமைக்கப்பட்டுள்ளது. இதற்காக தனிப்பட்ட குழுக்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு தகவல்களை கண்டறிந்து உடனடி நடவடிக்கை எடுத்து வருகின்றன. தேர்தல் முறையின் நேர்மையை பாதுகாப்பது என்பது சட்ட அமலாக்க அமைப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையேயான கூட்டு பொறுப்பு என்பதை இந்த முயற்சி வலியுறுத்துகிறது.

இந்த வீடியோ மற்றும் போஸ்டர் விழிப்புணர்வு முயற்சிகள் மூலம், பொதுமக்களை இணையவழி அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்க தேவையான விழிப்புணர்வு வழங்குவதோடு, ஜனநாயக செயல்முறையின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்ய இணையவழி குற்றப்பிரிவு முனைப்புடன் செயல்படுகிறது. பாதுகாப்பான இணையவழி சூழலை உறுதி செய்வதில் தங்களது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதி செய்து, அனைத்து குடிமக்களும் எச்சரிக்கையுடன் இருந்து, பகிர்வதற்கு முன் சரிபார்த்து, இணையவழி குற்றங்களை உடனடியாக புகாரளிக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

“கிளிக் செய்வதற்கு முன் சிந்திக்கவும் - பகிர்வதற்கு முன் சரிபார்க்கவும்.”

இணையவழி குற்றப்பிரிவு தலைமை இயக்குநர் டாக்டர். சந்தீப் மித்தல், இ.கா.ப., அவர்கள் பொதுமக்களுக்கு பின்வரும் அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

பொதுமக்களுக்கான அறிவுரைகள்:

செய்ய வேண்டியவை:

- தேர்தல் தொடர்பான செய்திகள் மற்றும் தகவல்களை பகிர்வதற்கு முன் தேர்தல் ஆணையம் மற்றும் அரசு அதிகாரப்பூர்வ வலைத்தளங்கள் (www. elections.tn.gov.inÎŸÁ‹https://voters.eci.gov.in/) மூலம் சரிபார்க்கவும்.
- போலி செய்திகள், தவறான தகவல்கள், deepfakes வீடியோக்கள் அல்லது சட்டவிரோத உள்ளடக்கங்களை தேசிய இணையவழிகுற்றப்புகார் தளத்தில் (www. cybercrime.gov.in) அல்லது 1930 என்ற இணையவழி குற்றஉதவி எண்ணிற்குஉடனடியாக புகாரளிக்கவும்.
- அறியப்படாத நபர்களிடமிருந்து வரும் SMS, மின்னஞ்சல், வாட்ஸ்அப் அல்லது சமூக ஊடக லிங்குகளை கிளிக் செய்வதில் எச்சரிக்கையாக இருக்கவும்.
- உங்கள் தனிப்பட்ட தகவல்கள், வங்கி விவரங்கள், OTP மற்றும் உள்நுழைவு தகவல்களை ரகசியமாக வைத்திருங்கள்.
- வலுவான கடவுச்சொற்களை பயன்படுத்தி, இரு நிலை அங்கீகாரம் (Two Factor Authentication) இயக்கி, உங்கள் சாதனங்களை முறையாக புதுப்பிக்கவும்.

செய்யக் கூடாதவை:

- தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தாமல் செய்தி, வீடியோ அல்லது பதிவுகளை பகிர வேண்டாம்.
- உணர்ச்சியை தூண்டும் அல்லது தவறாக வழிநடத்தும் பதிவுகளால் பாதிக்கப்படாதீர்கள்.
- போலி செய்திகள், மாற்றியமைக்கப்பட்ட படங்கள் அல்லது தவறான வீடியோக்களை உருவாக்குதல் அல்லது பகிர்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- OTP, கடவுச்சொல் அல்லது தனிப்பட்ட தகவல்களை கேட்கும் நபர்கள் தாங்கள் அதிகாரிகள் என கூறினாலும், யாருடனும் பகிர வேண்டாம்.
- வெறுப்பு, வன்முறை அல்லது சமூக அமைதியை பாதிக்கும் பதிவுகளை பகிர்வதை தவிர்க்கவும்.

புகாரளித்தல் :

சந்தேகத்திற்கிடமான எந்த செயல்பாடுகளையும் கண்டால் உடனடியாக 1930 என்ற இணையவழி குற்ற உதவி எண்ணில் தொடர்புகொள்ளவும் அல்லது www. cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் பதிவு செய்யவும்.

அச்சு மற்றும் ஒளி - ஒலி ஊடகங்கள் அனைவரும் இந்த விழிப்புணர்வு வீடியோவை தங்களது செய்தி சேனல்களில் இடைவேளைகளில் ஒளிபரப்பி பரவலாக பிரசாரம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த வீடியோவை கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து பதிவிறக்கம் செய்யலாம்.

QR Code of Video

QR code of Poster

... ஆசிரியர்

### கோவை மாவட்ட காவல்துறை செய்திகள்




பொதுமக்களுக்கு விரைவான சேவைகளை வழங்கும் நோக்கில், கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கார்த்திகேயன் இ.கா.ப., அவர்கள் (11.3.2026) மாவட்ட காவல் அலுவலகத்தில் Kovai DigiCop என்ற வாட்ஸ்அப் மூலம் இயங்கும் Chat Bot சேவையை மேற்கு மண்டல காவல்துறை தலைவர், கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் கோவை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் முன்னிலையில் துவக்கிவைத்தார்.

... சங்கரபாண்டியன்

### கரூர் மாவட்ட காவல்துறை செய்திகள்




கரூர், ஏப்ரல்

கரூர் மாவட்டத்தில் 35வது காவல் கண்காணிப்பாளராக திரு. D.N.ஹரி கிரண் பிரசாத் இ.கா.ப., அவர்கள் 17.03.2026 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

... சந்திரகுமார்

## மதுரை மாவட்ட காவல்துறை செய்திகள்



மதுரை, ஏப்ரல்

சட்டமன்றத்தேர்தல் - 2026ல் 100% வாக்கு பதிவை வலியுறுத்தியும், பொதுமக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் ஜனநாயக கடமையை நிறைவேற்றவும் மதுரை மாவட்ட காவல் சார்பாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் படி, (26.03.2026) கொடி அணிவகுப்பு ஊர்வலமானது மதுரை மாவட்ட உசிலம்பட்டி உட்கோட்டம், உசிலம்பட்டி நகர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட TNSTC டெப்போ, தேனி நெடுஞ்சாலை மெயின் பஜார், வழியாக உசிலம்பட்டி தாலுகா அலுவலகத்தில் நிறைவடைந்தது. இக்கொடி அணிவகுப்பில் , காவல்துறை துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர்கள், ஆளிநர்கள் மற்றும் மத்திய சேம காவல் படையினர் என 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், காவல் ஆணையர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி, (19.03.2026) C5 கரிமேடு காவல் நிலையத்துக்கு உட்பட்ட காளவாசல் பகுதியில், உறவினர்களால் கைவிடப்பட்டு, பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த திரு. மணி (48/26), திரு. தங்கராஜ் (56/26), திரு. சரவணன் (52/26), திரு. கண்ணன் (52/26), திரு. ராஜா (46/26), திரு. கணேசன் (65/26), திரு. பாலமுருகன் (40/26), திரு. தண்ணிக்கொடி (65/26), திரு. அர்ஜுன் (42/26), திரு. அர்ஜுன் (42/26), ஆகிய ஒன்பது நபர்களை குழந்தைகள் மற்றும் ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு (ACTU/AHTU) காவல் ஆய்வாளர் திருமதி. இந்திராணி அவர்கள் தலைமையிலான “காவல் கரங்கள்” அமைப்பைச் சேர்ந்த காவலர்கள் மீட்டு முதலுதவி அளித்து, பாதுகாப்பிற்காக மதுரை நாகதீர்த்தம் (கோடிமங்கலம்) பகுதியில் உள்ள அக்ஷயா டிரஸ்டில் -ல் சேர்த்து உள்ளனர்

(23.03.2026) B1 விளக்குத்தூண் காவல் நிலையத்திற்கு உட்பட்ட மீனாட்சி அம்மன் கோவில் வளாக பகுதியில், உறவினர்களால் கைவிடப்பட்டு, மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த திரு. சவ்ரப் சாகர் (38/26) மற்றும் E3 அண்ணா நகர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட வண்டியூர் பகுதியில், உறவினர்களால் கைவிடப்பட்டு, மனநலம் பாதிக்கபட்ட நிலையில் இருந்த திரு. ஆரு ராம் (35/26) ஆகிய இரு நபர்களையும் குழந்தைகள் மற்றும் ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. இந்திராணி அவர்கள் தலைமையிலான “காவல் கரங்கள்” அமைப்பைச் சேர்ந்த காவலர்கள் மீட்டு முதலுதவி அளித்து, பாதுகாப்பிற்காக மதுரை நாகதீர்த்தம் (கோடிமங்கலம்) பகுதியில் உள்ள அக்ஷயா டிரஸ்டில் -ல் சேர்த்து உள்ளனர்.



C1 திடீர்நகர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பெரியார் பேருந்து நிலைய பகுதியில், உறவினர்களால் கைவிடப்பட்டு, உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையிலிருந்த திரு.கருப்பையா (76/26) என்கிற முதியவரை குழந்தைகள் மற்றும் ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையிலான “காவல் கரங்கள்” அமைப்பைச் சேர்ந்த காவலர்கள் மீட்டு முதலுதவி அளித்து, பாதுகாப்பிற்காக மதுரை திருநகர் பகுதியிலுள்ள தாய்மடி முதியோர் காப்பகத்தில் சேர்த்து உள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவிய காவல் ஆணையர் அவர்கள் மற்றும் காவல் கரங்கள் அமைப்பை சேர்ந்த காவலர்களின் செயலை பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.

மதுரை மாவட்ட காவல்துறையில் நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்குகளை தனிப்பட்ட முறையில் கண்காணித்து வழக்குகளுக்கு தண்டனை பெற்றுத்தரும் விதமாக நீதிமன்ற விசாரணை கண்காணிப்பு குழு (Trial Monitoring Committee) அமைக்கப்பட்டு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் படி நிலைகளில் நீதிமன்ற விசாரணை கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் பொறுப்பில் சம்மந்தப்பட்ட காவல் நிலைய வழக்குகளின் நீதிமன்ற விசாரணைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மதுரை மாவட்டம் திருமங்கலம் உட்கோட்டம், திருமங்கலம் AWPS காவல் நிலையத்தில் கடந்த 2021 ம் வருடம் தாக்கலான போக்சோ வழக்கில் சம்மந்தப்பட்ட குற்றவாளியான கிருஷ்ணன் (57) திருமங்கலம் என்பவருக்கு எதிராக மதுரை மாவட்டம், போக்சோ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி போக்சோ வழக்கில் ஈடுபட்ட குற்றத்திற்காக மேற்கண்ட குற்றவாளிக்கு 7ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூபாய் 25,000/-அபராதமும் விதித்து, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதன்பேரில் மேற்படி நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையை தொடர்ந்து கண்காணித்து வழக்கின் சாட்சியங்கள் அனைவரையும் முறையாக நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தி இவ்வழக்கில் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் துரிதமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திருமதி.சிவசக்தி மற்றும் நீதிமன்ற தலைமை காவலர் திருமதி. மஞ்சுளா தேவி ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டி உள்ளார்.

... விஷ்ணுகுமார், விஜயகுமார்

காவல் விரைவு செய்தி
தமிழ் மாத இதழ்
TNTAM/25/A3638
ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
ஸ்ரீதர்
9514213993
இணை ஆசிரியர்:
ஈஸ்வரி மணிமுத்து
உதவி ஆசிரியர்கள்:
டேனியல் ராஜ், நாகராஜ்
நிர்வாக ஆசிரியர்: சொப்னா
தலைமை நிருபர்: நவீன்ராஜ்
நிருபர்கள் குழு:
இளையகுமார், காதர் முகைதீன், அஜித், ராமலிங்கம், கதிரவன், சங்கர் பாண்டியன், முரளி மோகன், பிரவீன்குமார், புஷ்பராஜ், விமல்ராஜ், செல்வகணபதி, திருப்பதி சுரேஷ்ராஜன், ராமர், பாலச்சந்திரன், சக்திவேல், முரளி, பிரவீன்குமார், ரவி, வினோத்குமார், இளையராஜா, சரவணன், சந்திரக்குமார், பிரசன்னா, புருஷோத்தமன், கண்ணன், சேது, வேலாயுதம், ஜெகதீஸ்வரன், பிரபாகரன், விஜயகுமார், விஷ்ணுகுமார், உதயசூரியன், ரமேஷ், விமல்ராஜ், ராஜேஷ், வடிவேல், மணிரத்தினம், செந்தில்குமார், சங்கரன், மணிகண்டன், சுரேஷ், சதீஷ்குமார், புஷ்பராஜ், ஜெகன், நவநீதகிருஷ்ணன்
வடிவமைப்பு: கிருபாகரன்
Email:
kaavalviraivuseithi@kaavalviraivuseithi.com
Website :
www.kaavalviraivuseithi.com

சிறப்புக்கட்டுரைகள், மற்றும் பேட்டியின் கருத்துக்கள், அதைத் தெரிவித்தவர்களின் சொந்த கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு ‘காவல் விரைவு செய்தி’ நிர்வாகம் பொறுப்பல்ல.

## திருச்சி மாவட்ட காவல்துறை செய்திகள்



திருச்சி, ஏப்ரல்

திருச்சி மாவட்டம், கொள்ளிடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் 16.03.2026 அன்று இரவு ரோந்து பணியின் போது திருட்டு குற்றத்தில் ஈடுபட்ட நபரை பிடித்து அவரிடமிருந்து திருடப்பட்ட நகையை பறிமுதல் செய்த சிறப்பான பணியினை பாராட்டி கொள்ளிடம் காவல் நிலைய காவலர்களுக்கு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ. செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்கள் நற்பணி சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

திருச்சி மாவட்டம், துவாக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் அடிதடி வழக்கில் தொடர்புடைய சரித்திர பதிவேடு குற்றவாளியை குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்ய (18.03.2026) ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், புத்தாநத்தம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 12.02.2026 அன்று பிரபாகரன் என்பவரை கொலை செய்த வழக்கில் தொடர்புடைய பப்லு (எ) பிரபு என்பவரை குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல்துறை துவாக்குடி அரசு கலை கல்லூரியில் மாணவி ராக்கிங் (RAGGING) செய்து தாக்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பான விளக்க அறிக்கை...

துவாக்குடி அரசு கலைக் கல்லூரியில் பயிலும் மாணவியின் செல்போனை அதே கல்லூரியில் பயிலும் மாணவன் தவறுதலாக தட்டி விட்டதால் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. கல்லூரியில் மாணவியை ராகிங் (RAGGING) செய்யப்பட்டதாக கூறப்படுவது தவறான தகவல் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வழிப்பறியில் ஈடுபட்டது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள கார்த்திக் (எ) கண்ணாடி கார்த்திக் என்பவரை தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், சோமரசம்பேட்டை பகுதியில் விற்பனைக்காக சுமார் 2.100 கிலோ கஞ்சாவை வைத்திருந்தது தொடர்பாக திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய நபரை குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், கல்லக்குடி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சுமார் 1981.800 கிலோ தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனைகாக பதுக்கி வைத்திருந்த இருவரை குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், துறையூர் பகுதியில் சிறுமியை பாலியல் தாக்குதலுக்கு உட்படுத்தியது தொடர்பாக முசிறி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்கில் தொடர்புடைய நபரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், ஜீயபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறுமியை பாலியல் தாக்குதலுக்கு உட்படுத்தியது தொடர்பாக ஜீயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்கில் தொடர்புடைய குற்றவாளியான தமிழரசன் என்பவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூபாய் 20,000/- அபராதம் விதித்து இன்று (23.03.2026) தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், ராம்ஜிநகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சுமார் 7,000 கிலோ கஞ்சாவை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த 5 சரித்திர பதிவேடு குற்றவாளிகளை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ. செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் பரிந்துரையின் பேரில் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாநகர காவல்...

கடந்த 14.12.2021-ந்தேதி ஸ்ரீரங்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருவானைக்காவல் நெல்சன்ரோட்டில், 8ம் வகுப்பு படித்து வந்த சிறுமியை 3 மாதங்களாக காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி, குழந்தை திருமணம் செய்து, சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக சமூக நல அலுவலரிடமிருந்து பெறப்பட்ட புகாரின்பேரில், விசாரணை செய்தததில் திருவானைக்காவல் நெல்சன்ரோட்டை சேர்ந்த எதிரி முருகேசன் 21/26 த.பெ. ஜெயராமன் என்பவரை கைது செய்து, எதிரி மீது ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை விரைந்து முடிக்கப்பட்டு, கடந்த 14.04.2022-ந்தேதி மேற்படி எதிரி முருகேசன் மீது குற்றப்பத்திரிக்கையை புலன் விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். 11.03.2026-ந்தேதி மேற்படி வழக்கில் திருச்சிராப்பள்ளி மாண்பமை அமர்வு நீதிபதி, மகிளா நீதிமன்றம் அவர்களால் எதிரி முருகேசன் என்பவருக்கு போக்சோ வழக்கின் கீழ் 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.5000/- அபராதமும், குழந்தை திருமணம் தடை சட்டத்தின் கீழ் 1 ஆண்டு தண்டனை மற்றும் ரூ.5000/- அபராதமும் என 20 ஆண்டுகள் தண்டனை மற்றும் ரூ.10,000/- அபராதம் என தீர்ப்பு வழங்கப்பட்டு, இந்த சிறை தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வழக்கில் சிறப்பாக புலன் விசாரணை செய்து, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து, நீதிமன்ற விசாரணைக்கு சாட்சிகளை குறித்த காலத்தில் ஆஜர்படுத்தியும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிக்கு தண்டனை பெற்றுத்தந்த ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் நிலைய காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களை திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி காமினி, இ.கா.ப., அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

திருச்சி மாவட்டம், மணப்பாறை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பேருந்துக்காக காத்திருந்த பெண்ணின் கைப்பையிலிருந்து பணத்தை திருடிய வழக்கில் தொடர்புடைய 3 பேருக்கு தலா இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூபாய் 5,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் 2026-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தலை முன்னிட்டு,பொதுமக்கள் எவ்வித அச்சமின்றி சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும் என்ற நம்பிக்கை வளர்க்கவும், திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி காமினி, இ.கா.ப., அவர்களின் உத்தரவின்படி, மாநகர காவல் துணை ஆணையர் திரு. செந்தில்குமார், இ.கா.ப., அவர்களின் தலைமையில், மாநகர காவல்துறையினர் மற்றும் மத்திய துணை ராணுவப் படையினர் இணைந்து, கொடி அணிவகுப்பானது நடத்தப்பட்டது.

... புஷ்பராஜ்

## அரியலூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

அரியலூர், ஏப்ரல்

அரியலூர் மாவட்டம் விக்கிரமங்கலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பெரியத்திருக்கோணம் கிராமத்தில் கடந்த 20.03.2026 அன்று ராஜலட்சுமி (வயது 72) க/பெ துரைசாமி என்பவர் வீட்டிலேயே மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.



மேலும் அவர் கையில் இருந்த வளையல் ஒன்று மற்றும் பீரோவில் இருந்த நகைகள் என 17 1/2 சவரன் நகைகள் கொள்ளை போனது. இச்சம்பவம் குறித்து விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் 20.03.2026 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.விஷ்வேஷ் பா.சாஸ்திரி இ.கா.ப., அவர்களின் உத்தரவின்படி, ஜெயங்கொண்டம் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தினேஷ்குமார் அவர்கள் மேற்பார்வையில், விக்கிரமங்கலம் காவல் ஆய்வாளர் திரு.கருணாகரன் அவர்கள், ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி அவர்கள் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. விசாரணையின் அடிப்படையில் இறந்து போன ராஜலட்சுமிக்கு மூன்று மகள்கள் உள்ளனர். இதில் அனைவரும் திருமணமாகி வெளியூரில் வசித்து வருகின்றனர். தனது கணவர் இறப்புக்கு பின்னர் ராஜலட்சுமி கடந்த 25 ஆண்டுகளாக உள்ளூரில் உள்ள தனது அண்ணன் ராஜாஜி வீட்டில் வசித்து வந்த நிலையில், 20.03.2026 சம்பவத்தன்று தன் பாட்டி ராஜலட்சுமியை தவிர மற்ற அனைவரும் திருச்சியில் உள்ள மருத்துவமனைக்கு சென்றுள்ளனர் என்பதை அறிந்த, மேலப்பழூவூர் கிராமத்தில் வசித்து வரும் ராஜலட்சுமி இரண்டாவது மகளான சரோஜாவின் மகன் தினேஷ்குமார் (வயது 29) மற்றும் அவருடைய நண்பர் கள்ளக்குறிச்சி மாவட்டம் உதயமாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சடையன் மகன் சசிக்குமார் (வயது 27) என்பவருடன் இணைந்து கொள்ளையடிக்க திட்டம் தீட்டி பெரியதிருக்கோணத்தில் உள்ள தன் பாட்டி ராஜலட்சுமி வசிக்கும் வீட்டிற்கு வந்து, தனியாக இருந்த ராஜலட்சுமியின் கழுத்தை நெறித்து கொலை செய்து, அவர் அணிந்திருந்த வளையல் ஒன்று மற்றும் பீரோவில் இருந்த நகைகள் என சுமார் 17 1/2 சவரன் நகைகள் கொள்ளையடித்து சென்றது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இந்த வழக்கானது கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு, இக்குற்றச்செயலில் ஈடுபட்ட குற்றவாளிகள் இருவரையும் விக்கிரமங்கலம் காவல்துறையினர் கைது செய்து, அவர்களிடம் இருந்து 17 1/2 சவரன் நகைகள் மற்றும் குற்றச்சம்பவத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனம் ஒன்றும் பறிமுதல் செய்தனர். மேலும் கொலையாளிகள் இருவரையும் நீதிமன்ற காவலுக்கு ஆஜர்படுத்தி, சிறையில் அடைத்தனர். இவ்வழக்கு குறித்து புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும் இவ்வழக்கில் குற்றவாளிகளை கண்டுபிடிக்க சிசிடிவி கேமரா பெரிதும் பயனுள்ளதாக அமைந்தது. எனவே பொதுமக்கள் மூன்றாவது கண்ணான சிசிடிவி கேமராவை பொருத்தி உங்கள் பாதுகாப்பினை உறுதி செய்திட மாவட்ட காவல்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

...இளையகுமார்

## திண்டுக்கல் மாவட்ட காவல்துறை செய்திகள்



திண்டுக்கல், ஏப்ரல்

திண்டுக்கல் சரகத்திற்கு காவல்துறை துணைத் தலைவராக மருத்துவர் சசிமோகன்., இ.கா.ப., அவர்கள் (05.03.2026) பொறுப்பேற்றுக் கொண்டார்கள். நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப்., இ.கா.ப., அவர்கள் மற்றும் மாவட்ட பயிற்சி காவல் கண்காணிப்பாளர் செல்வி. நேஹா., இ.கா.ப., அவர்கள் காவல்துறை துணைத் தலைவர் அவர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2024-ம் ஆண்டு சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த வழக்கில் சேலம் வாழப்பாடி பகுதியைச் சேர்ந்த மணிகண்டன்(29) மற்றும் இவருக்கு உடந்தையாக இருந்த ஹெலன் ஷீபா(44) ஆகிய இருவரையும் பழனி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப், இ.கா.ப அவர்களின் அறிவுறுத்தலின் படி இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான பழனி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு.தனஞ் செயன் அவர்கள், நீதிமன்ற முதல் நிலைக்காவலர் திருமதி.இலக்கியா அவர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர் திருமதி.மைதிலி அவர்களின் சீரிய முயற்சியால் (26.03.2026) இன்று திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் முதல் குற்றவாளியான மணிகண்டன் என்பவருக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய 05 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.35,000/- அபராதமும் இரண்டாம் குற்றவாளியான ஹெலன் ஷீபா என்பவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.25,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்கள். இந்த ஆண்டு 4 போக்சோ வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

...ராமர்

## தர்மபுரி மாவட்ட காவல்துறை செய்திகள்



தருமபுரி, ஏப்ரல்

தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மகேஸ்வரன்,B.com.BL., அவர்களின் தலைமையில் பொதுமக்களின் குறை தீர்க்கும் முகாம் (பெட்டிஷன் மேளா) நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட குற்ற அவணக் காப்பக காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.ஸி.குணவர்மன் அவர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர். இப்பெட்டிஷன் மேளாவில் பொதுமக்களால் வழங்கப்பட்ட 57 மனுக்கள் மீது விசாரணை செய்யப்பட்டு, 57 மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டது. மேலும் புதிதாக 41 மனுக்கள் பெறப்பட்டன.

தருமபுரி மாவட்டத்தில் பதநீர் இறக்கி பனைவெல்லம் தயாரிப்பதாக கூறி அனுமதி பெற்று, கள் இறக்கி அதில் கலப்படம் செய்து விற்பனை நடைபெறுவதாகவும், அதனைத் தடுத்து காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொண்ட போது நல்லம்பள்ளி அருகே உள்ள பரிகம் பகுதியைச் சேர்ந்த நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர் கமல் என்பவர் ஆட்களை திரட்டி காவல்துறையினரை வழக்கு பதிவு செய்ய விடாமல் மிரட்டியதாகவும் வெளிவந்த செய்தியில் உண்மையில்லை. தருமபுரி மாவட்டத்தில் காவல் நிலையங்கள் மற்றும் மதுவிலக்கு அமலாக்க பிரிவு இணைந்து, கள் இறக்குதல் மற்றும் சட்டவிரோத விற்பனைக்கு எதிராக கடந்த 3 மாதங்களில் 156 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 511 லிட்டர் கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் கள் விற்பனையாளர்களுக்கு எதிராக தொடர்ந்து சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது

தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட அ.மல்லாபுரம் கிராமம், கீழ் பட்டாளம்மன் கோவில் தெருவை சேர்ந்த ரஞ்சித் (28) த/பெ திருப்பதி என்பவர் காணவில்லை என அவரது தந்தை திருப்பதி 11.03.2026ஆம் தேதி மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து காவல்துறையினர் விசாரித்து வந்த நிலையில், காணாமல் போன ரஞ்சித் அ.மல்லாபுரம் அடுத்த MGR நகரில் உள்ள விவசாய கிணற்றில் சடலமாக கிடப்பதாக 11.03.2026-ம் தேதி மாலையே கிடைத்த தகவலின் பேரில் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று தீயணைப்பு துறையினர் உதவியுடன் சடலத்தை மீட்டு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து, தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தை காவல்துறை சார்பாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தருமபுரி மாவட்டம், இண்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கும்பளபாடி கிராமத்தில் தனியார் கல்குவாரி கிரஷர் ஒன்று தொடங்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக அப்பகுதி பொதுமக்கள் வாழ்வாதாரம், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்ற காரணங்களை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் சூழ்நிலை உருவாகக்கூடும் என்பதை கருத்தில் கொண்டு ஊர் பொதுமக்கள் மற்றும் கிரஷர் உரிமையாளர் ஆகிய இரு தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பேச்சுவார்த்தையின் போது, இரு தரப்பினரிடமும் கருத்துகள் கேட்கப்பட்டு, பிரச்சினைக்கு சுமூகமாக தீர்வு காணும் வகையில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, பேச்சுவார்த்தை முடிந்து காவல் நிலையத்திலிருந்து வெளியே சென்றபோது, இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது காவல்துறையினர் உடனடியாக தலையிட்டு அவர்களைத் தடுத்து, தொடர் பிரச்சினை ஏற்படாத வகையில் அறிவுரை வழங்கி அங்கிருந்து அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக இரு தரப்பினரும் அளித்த புகார்களின் அடிப்படையில் மனு ரசீது வழங்கப்பட்டு தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தருமபுரி மாவட்டம், ஏரியூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வத்தல்பட்டி கிராமத்தில் இரு குடும்பங்களுக்கு இடையே இலவச வீட்டுமனை தொடர்பாக நீண்ட நாட்களாக நிலத் தகராறு இருந்து வந்த நிலையில், 11.03.2026 அன்று காலை ஏற்பட்ட மோதலில் இரு தரப்பினரும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட புகார் வாக்குமூலங்களின் அடிப்படையில் ஏரியூர் காவல் நிலையத்தில் இரு தரப்பினருக்கும் எதிராக தனித்தனியே இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனிடையே சம்பவ இடத்தில் இல்லாதவர்கள் மீது ஒரு தரப்பினர் புகார் அளித்துள்ளதாக கூறி போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு காவல் நிலையம் முன்பு சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது போலீசார் சம்பவம் தொடர்பான ஆதாரங்களுடன் நிலைமையை விளக்கி பேச்சுவார்த்தை நடத்தி சாலை மறியலை கைவிடச் செய்தனர். மேலும் இவ்வழக்கு தொடர்ந்து புலன் விசாரணையில் உள்ளது என்ற விளக்கத்தினை தருமபுரி மாவட்ட காவல் துறை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தருமபுரி மாவட்டம், அரூர் தாலுகா, கோட்டப்பட்டி காவல் நிலையத்திற்கு உட்பட்ட நரிப்பள்ளி கிராமத்தை சேர்ந்த ஏழுமலை (57) த/பெ வெங்கட்ராமன் மற்றும் அதே பகுதியில் வசிக்கும் ராஜா(45) த/பெ ராமமூர்த்தி ஆகிய இரு குடும்பத்தாருக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்த நிலையில், 23.03.2026-ம் தேதி ஏற்பட்ட மோதலில் இரு தரப்பினரும் காயமடைந்ததாக அரூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்து கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் 23.03.2026-ம் தேதி அன்றே கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் இரு தரப்பினருக்கும் எதிராக தனித்தனியே இரு வழக்குகள் பதிவு செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

... சுரேஷ்ராஜன்

## கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை செய்திகள்



கன்னியாகுமரி, ஏப்ரல்

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காவல் நிலையத்திற்கு உட்பட்ட குறும்பனை பகுதியை சேர்ந்த சுஜின் மோன் என்பவரது மனைவி மேரி கிபி லின்சா என்பவரது வீட்டை உடைத்து 45 பவுன் திருட்டு போயிருந்தது. இது குறித்த புகார் சம்பந்தமாக குளச்சல் காவல் நிலைய குற்ற எண் 67/2026 U/S 331(4), 305(6) BNS பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் IPS அவர்களின் உத்தரவின்படி குளச்சல் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் திருமதி. ரேகா ஆர்.நங்லட் IPS அவர்களின் மேற்பார்வையில் குளச்சல் காவல் நிலைய ஆய்வாளர் திரு ஷேக் அப்துல் காதர் அவர்கள் தலைமை யிலான போலீசார் குற்றவாளியை கண்டறிந்து கைது செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தனர் தொழில்நுட்பம் சம்பந்தமான விசாரணை செய்யப்பட்டது. இந்நிலையில் இக்குற்றத்தில் ஈடுபட்டது முட்டம் பகுதியை சேர்ந்த தாசன் என்பவரது மகன் சகாய ஜோஸ் ஆண்டனி என்பவர் என்று தெரிய வந்தது. குற்றவாளியை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து திருட்டுப் போன முழு நகைகளும் மீட்கப்பட்டது. சிறப்பாக பணியாற்றி குற்றவாளி கைது செய்து நகைகளை மீட்ட போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை போன்ற போதை பொருட்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் IPS அவர்கள் கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக தக்கலை சுற்று வட்டார பகுதிகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மதுவிலக்கு போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மதுவிலக்கு துணை காவல் கண்காணிப்பாளர் திரு. ராஜா அவர்கள்மேற்பார்வையில், ஆய்வாளர் திரு.தமிழரசன் தலைமையில் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் 20 கிலோ எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் இரண்டு சக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதில் நாகர்கோவில் காமராஜபுரம் அம்மன் கோவில் தெரு பகுதியை சேர்ந்த ஜோசப் ராஜ் என்பவரது மகன் ஜெரின் ஜோஸ் (37), என்பவரிடம் இருந்து 20 கிலோ கஞ்சா மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த கைது நடவடிக்கையானது மேலும் தீவிரபடுத்தப்படும் என்றும், கஞ்சா விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் IPS அவர்கள் நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி தருவதில் முன்னுரிமை குறித்து செயல்பட்டு வருகிறார். நீதிமன்ற வழக்கு விசாரணைகளை தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது புலன் விசாரணை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சுகிராமம் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் தாசன் @ இயேசு அமிலதாசன் பொது குடிநீர் குழாயை பிச்சைக்குடி யிருப்பு மீன் சந்தை பகுதியில் இருந்து மாற்றிய விவகாரத்தில் ஏற்பட்ட முன் தகராறின் காரணமாக, அவர், அவரது சகோதரி மற்றும் தாயார் கடைக்கு சென்றுகொண்டிருந்த போது, குற்றவாளிகள் ஆயுதங்களுடன் கூடி வழிமறித்து தாக்கினர். அதில் கம்பி மற்றும் அரிவாளால் பல இடங்களில் தாக்கப்பட்டதால், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கின் விசாரணை நாகர்கோவில் விரைவு மகிளா நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட 1. திருநெல்வேலி மாவட்டம் ரஜ கிருஷ்ணபுரத்தை சேர்ந்த ரவிமணி என்பவரின் மனைவி ரஞ்சிதம் 2. அழகப்பபுரம் மங்கம்மாள் சாலை பகுதியை சேர்ந்த நவமணி என்பவரின் மகன் கண்ணன் 3. திருநெல்வேலி மாவட்டம் ராஜகிருஷ்ணபுரம் பகுதியை சேர்ந்த ரவிமணி என்பவரின் மகன் ஜெகன் 4. ராஜகிருஷ்ணபுரம் பகுதியை சேர்ந்த பாண்டியன் என்பவரின் மகன் பாக்யராஜ் 5. ராஜகிருஷ்ணபுரம் ரவிமணி என்பவரின் மகன் ஸ்ரீனிவாசன் 6. ராஜ கிருஷ்ணபுரம் ரவிமணி என்பவரின் மகன் சங்கர் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.நீதிமன்ற வழக்கு விசாரணை, சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு குற்ற வழக்கறிஞர், நீதிமன்ற காவலர், இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணையை முறையாக கண்காணித்த கன்னியாகுமரி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், அஞ்சுகிராமம் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.



கடந்த 20.04.2021 தேதியன்று குலசேகரம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட சுருளக்கோடு பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக கணபதி என்பவரின் மகன் சுரேஷ் 42, என்பவர், அதே பகுதியை சார்ந்த தங்கச்சன் என்பவரின் மகன் செந்தில் 41, என்பவரை வெட்டு கத்தியால் தலையில் வெட்டி உள்ளார் இது சம்பந்தமாக பாதிக்கப்பட்டவரின் மனைவி கொடுத்த புகாரின் அடிப்படையில் குலசேகரம் போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்தனர். வழக்கு விசாரணை பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில் சுரேஷ்-க்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனையும் மற்றும் ரூ.5000, அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கியது. சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, நீதிமன்ற காவலர், மேலும் நீதிமன்ற விசாரணையை சிறப்பாக கண்காணித்த தக்கலை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர். மற்றும் குலசேகரம் காவல் ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.



... இளையராஜா, வேலாயுதம்

## கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை செய்திகள்

கிருஷ்ணகிரி, ஏப்ரல்

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்திகிரி காவல் நிலைய பகுதியில் டிவிஎஸ் சோதனை சாவடி அருகே ஓசூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு போலீசார் வாகன தணிக்கை அலுவலில் இருந்தபோது அவ்வழியாக வந்த இரண்டு நபர்களை நிறுத்தி சோதனை செய்த போது வெளிமாநில மதுபானம் வைத்திருந்தனர் இரண்டு நபர்களை கைது செய்து அவர்களிடமிருந்து வெளிமாநில மதுபானங்கள் பறிமுதல் செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சிப்காட் காவல் நிலைய பகுதியில் ஜூஜூவாடி சோதனை சாவடி அருகே போலீசார் வாகன சோதனை செய்து கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ரூ.3,00,888/- ரூபாய் மதிப்பிலான புகையிலை பொருட்கள் மற்றும் ரூ.3,840/- ரூபாய் மதிப்பிலான மதுபானம் இருந்தது. வெளி மாநிலத்திலிருந்து புகையிலை பொருட்கள், மதுபானம் கடத்தி வந்த நபரை கைது செய்து அவரிடமிருந்து மதுபானங்கள், குட்கா பொருட்களுடன் வாகனத்தை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

பர்கூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தண்ணீர் பள்ளம் கிராமத்தில் போலீசார் ரோந்து அலுவலில் இருந்தபோது அவ்வழியாக வந்த வாகனத்தை தடுத்து நிறுத்தி சோதனை செய்த போது வாகனத்தின் ஓட்டுனர் வாகனத்தை நிறுத்திவிட்டு ஓடிவிட்டார். நிறுத்திய வாகனத்தை சோதனை செய்ததில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ரூ.2,52,400 /- ரூபாய் மதிப்பிலான புகையிலை பொருட்கள் இருந்தது, வாகனத்துடன் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அஞ்செட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வண்ணாத்திப்பட்டி பனையூர் ஏரி ஓடைப்புதரில் சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் சோதனை செய்தபோது அங்கு சாராயம் காய்ச்சுவதற்காக ஊறல் வைத்திருந்த நபரை கைது செய்து அவர்களிடமிருந்து சுமார் 600 லிட்டர் ஊறல் மற்றும் 3 லிட்டர் சாராயத்தை பறிமுதல் செய்து சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து எதிரியுடன் காவல் நிலையம் வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்

மத்திகிரி காவல் நிலைய பகுதியில் TVS சோதனை சாவடி அருகே போலீசார் வாகன சோதனையில் இருந்த போது அவ்வழியாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது வெளிமாநில மதுபானங்கள் இருந்தது, மதுபானங்களை கடத்தி வந்த நபரை கைது செய்து அவரிடமிருந்து வாகனத்துடன் மதுபானங்கள் பறிமுதல் செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்

... ஜெகதீஸ்வரன், பிரபாகரன்

## சிவகங்கை மாவட்ட காவல்துறை செய்திகள்

சிவகங்கை, ஏப்ரல்

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை காவல் நிலைய சரகம் அனந்தபுரம் பைபாஸ் அருகே உள்ள செல்லம் என்பவரது வீட்டின் மாடியில், செல்லம் என்பவரது மகனான சதீஷ் மற்றும் அவர்களது நண்பர்களான கார்த்திகேயன்(த/பெ.மலையான், குருந்தங்குளம்), முனீஸ்வரன் (த/பெ.வேலுச்சாமி, இடைக்காட்டுர்) ஆகிய மூவரும் மது அருந்தி உள்ளனர். அப்போது சதீஷ் குமார் என்பவரின் மனைவியை முனீஸ்வரன் தவறாக பேசியுள்ளார். இதனால் கோபம் அடைந்த சதீஷ்குமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர், முனீஸ்வரனை மது பாட்டிலை உடைத்து அவரது கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளனர். அனந்தபுரம் பைபாஸ் செல்லம் என்பவர் வீட்டில் மாடியில் ஒருவர் கழுத்தில் காயங்களுடன் இறந்து கிடக்கிறார் என்ற தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பிரேதத்தை கைப்பற்றி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காவல் ஆய்வாளர் திரு. குமரவேல் பாண்டியன் மானாமதுரை காவல் நிலையம் அவர்கள் விசாரணை செய்து, குற்றவாளிகளான கார்த்திகேயன் மற்றும் சதீஷ்குமார் ஆகிய இருவரையும் கைது செய்துள்ளனர். இது தொடர்பாக, மேற்கொண்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

மானாமதுரை காவல் நிலைய ஆய்வாளர் திரு.குமரவேல் பாண்டியன், (பொறுப்பு திருப்பாச்சேத்தி காவல் நிலையம்) தலைமையில், திருப்பாசேத்தி காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ள மூன்று NBW (Non-Bailable Warrant) வழக்குகள் சம்மந்தமாக மிக்கல்பட்டிணத்தைச் சேர்ந்த சரித்திரபதிவேடு (A+ category) குற்றவாளியான ஊர்காவலனை திருப்பாச்சேத்தி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கானூர் கிராமம் மயானம் அருகே, கைது செய்ய முயன்ற போது, ஊர்காவலன் வாளால் காவல் ஆய்வாளர் குமரவேல் பாண்டியனை தாக்க முயன்றுள்ளார். அப்போது காவல் ஆய்வாளர் குமரவேல் பாண்டியன் முதலில் வானில் எச்சரிக்கை துப்பாக்கிச்சூடு மேற்கொண்டார். இருந்தபோதிலும் ஊர்காவலன் மீண்டும் ஆய்வாளரை தாக்க முயன்றதால், தற்காப்பு நடவடிக்கையாக ஆய்வாளர் குமரவேல் பாண்டியன் ஊர்காவலனின் வலது காலில் துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதில் அவருக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் காயமடைந்த ஊர்காவலன் உடனடியாக திருப்புவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேற்படி சரித்திரபதிவேடு (A+category) குற்றவாளியான ஊர்காவலன் என்பவர் மீது கொலை வழக்குகள் -3, கொலை முயற்சி வழக்குகள் - 2 உட்பட கஞ்சா வழக்குகள், அடிதடி வழக்குகள், சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் வழக்குகள் என மொத்தம் 33 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சொட்டத்தட்டி கிராமத்தைச்சேர்ந்த நிறைகுளத்தான் (66) என்பவர், தனது சகோதரி சரஸ்வதி (52) என்பவரை காணவில்லை என புகார் மனு அளித்துள்ளார். இது தொடர்பாக, கடந்த 17.02.2026ம் தேதி திருப்புவனம் காவல் நிலைய குற்ற எண்.48/26, பிரிவு. Woman Missing ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்கின் விசாரணையில், காணாமல் போன சரஸ்வதி என்பவர் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா கூடக்கோவில் கிராமத்தை சேர்ந்த சரவணகுமார் (21) என்பவருடன் தொடர்பில் இருந்தது தெரியவந்தது. அவரை விசாரித்ததில் 11.02.2026 அன்று தனது கூடக்கோவில் பண்ணைக்கு சரஸ்வதியை அழைத்துச் சென்று திருமணம் தொடர்பான பிரச்சனையில் வாய்த்தகராறு ஏற்பட்டதில், அவரை தாக்கி கொலை செய்து, அருகில் உள்ள ஆழமான தண்ணீர் நிரம்பிய கல் குவாரி குழியில் உடலை வீசியதாக ஒப்புக்கொண்டார். குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் கைப்பற்றப்பட்டது. குவாரி குழி மிகவும் ஆழமாக இருந்ததால், சென்னையிலிருந்து Diving team வரவழைக்கப்பட்டு உடலை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. குற்றவாளி சரவணகுமார் கைது செய்யப்பட்டு, வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட உள்ளார். மேற்படி சம்பவ இடம் மதுரை மாவட்ட எல்லைக்குட்பட்டதால், மேல் விசாரணைக்காக வழக்கு மதுரை மாவட்ட காவல்துறைக்கு மாற்றப்பட உள்ளது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

... ஈஸ்வரி மணிமுத்து, இணை ஆசிரியர்

## தென்காசி மாவட்ட காவல்துறை செய்திகள்

தென்காசி, ஏப்ரல்

தென்காசி மாவட்டம், புளியங்குடி உட்கோட்ட காவல் நிலைய எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உரிமை கோரப்படாத நிலையில் இருந்து வரும் 197 இருசக்கர வாகனங்களும் 3 மூன்று சக்கர வாகனங்களும் 2 நான்கு சக்கர வாகனங்களும் சேர்ந்து மொத்தம் 202 மோட்டார் வாகனங்களுக்கான பொது ஏலம் வருகின்ற 23.03.2026 ஆம் தேதி காலை 09.00 மணி முதல் மதியம் 3.00 மணிவரை சொக்கம்பட்டி காவல்நிலைய வளாகத்தில் வைத்து நடைபெற இருந்தது. தற்சமயம் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 அன்று நடைபெற இருப்பதால், மேற்கண்ட வாகனங்களுக்கான ஏல அறிவிப்பு ரத்து செய்யப்படுகிறது. மேலும் தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்து வருவதால், ஏலதாரர்கள் பணத்தை ரொக்கமாக கொண்டு வருவதில் இருக்கின்ற சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுக்கு வந்த பின்னர் மேற்கண்ட வாகனங்களுக்கான ஏலம் மற்றொரு தேதியில் அறிவிக்கப்பட்டு நடைபெறும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் கஞ்சா ஆகியவற்றின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் விதமாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மாதவன் T.P.S., அவர்களின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர். (15.03.2026) செங்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தேன்பொத்தை பகுதியில் சட்டவிரோதமாக புகையிலை பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின் பெயரில் காவல்துறையினர் திடீர் சோதனை மேற்கொண்டதில் தேன்பொத்தை வைரவன் மகன் திருமலைக்குமார் (27) மற்றும் விஸ்வநாதபுரம் தங்கராஜ் மகன் ராஜேஷ் குமார் (29) ஆகியோர்களை கைது செய்து விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த 87 கிலோ எடை கொண்ட ( மதிப்பு சுமார் 47,000) அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து மேற்படி இரண்டு நபர்கள் மீதும் செங்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர் . மேலும் புகையிலை பொருட்கள் எங்கிருந்து வாங்கிவரப்பட்டது குறித்தும் விசாரித்து வருகின்றனர்.

தென்காசி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த மாதம் கஞ்சா கடத்தப்படுவதாக காவல்துறை கிடைத்த ரகசிய தகவலின் பேரில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 11 கிலோ கஞ்சா, லாரி, நான்கு சக்கர வாகனம் மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்த நிலையில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளான அம்பாசமுத்திரம் சுப்பிரமணியபுரம் பொத்தை பகுதியை சேர்ந்த பரமசிவன் என்பவரின் மகன் நயினார் விக்னேஷ் (வயது 32), ஆலங்குளம் நெட்டூர் பகுதியை சேர்ந்த முப்புடாதி என்பவரின் மகன் இசக்கி குமார் (வயது 31), இசக்கிமுத்து என்பவரின் மகன் பேச்சு முத்து (வயது 30) ஆகியோர் மீது பிரிவு 14 தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு மாதவன் T.P.S., அவர்கள் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் திரு. ஏ.கே.கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின் பேரில் மேற்படி மூன்று குற்றவாளிகள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

... மணிரத்தினம்

## திருப்பூர் மாவட்ட காவல்துறை செய்திகள்



திருப்பூர், ஏப்ரல்

23.03.2026-ம் தேதி காலை 11.00 மணிக்கு திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் வருகின்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் - 2026 நடைபெறுவதை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி, திருப்பூர் மாநகர காவல் ஆணையர் மற்றும் திருப்பூர் மாநகர மற்றும் மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) திரு.ராகுல் ஹெக்டே, இ.கா.ப., ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் திருப்பூர் மாநகர காவல் துணை ஆணையர்கள் (வடக்கு மற்றும் தெற்கு) மற்றும் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கலந்து கொண்டார்கள். மேலும் இந்த ஆலோசனை கூட்டத்தில் திருப்பூர் மாநகரம் மற்றும் மற்றும் மாவட்டத்தில் உள்ள சரக/உட்கோட்ட காவல் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

24.03.26 - ம் தேதி காலை 11.00 மணிக்கு திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வருகின்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி, திருப்பூர் மாவட்ட




தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) திரு.ராகுல் ஹெக்டே, இ.கா.ப., மற்றும் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் துணை ராணுவப்படை உயர் அதிகாரிகள் மற்றும் திருப்பூர் மாவட்ட தேர்தல் பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் திருப்பூர் மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) திரு.ராகுல் ஹெக்டே, இ.கா.ப., அவர்கள் திருப்பூர் மாவட்டத்தின் பதட்டமான வாக்குச்சாவடி பகுதிகளை நேரில் ஆய்வு செய்தார், அப்போது திருப்பூர் மாவட்ட உட்கோட்ட காவல் அதிகாரிகள் மற்றும் காவல் நிலைய பொறுப்பு அதிகாரிகள் உடனிருந்தனர்.

... செந்தில்குமார், நவநீதன்

## திருவண்ணாமலை மாவட்ட காவல்துறை செய்திகள்



திருவண்ணாமலை, ஏப்ரல்

திருவண்ணாமலை மாவட்ட காவல் அலுவலகத்தில் (11.03.2026) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. M.சுதாகர், இ.கா.ப., அவர்கள் தலைமையில் பொதுமக்கள் குறைத்தீர்வு சிறப்பு மனு விசாரணை முகாம் நடைபெற்றது.

25.03.2026 திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.M.சுதாகர், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்படி, வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலை முன்னீட்டு பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க ஆரணி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு. சுரேஷ் சண்முகம் அவர்களின் தலைமையில், ஆரணி உட்கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் காவல்துறையினர் மற்றும் துணை ராணுவத்தினர் சார்பில் கொடி அணிவகுப்பு நடத்தப்பட்டது.

... பிரபு, மணிகண்டன்

## தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

தஞ்சாவூர், ஏப்ரல்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் உட்கோட்டம் கும்பகோணம் தாலுக்கா காவல் நிலையத்திற்குட்பட்ட தாராசுரம் கீழத்தெருவை சேர்ந்த கவிதா என்பவருக்கும் அவரது கணவர் ஆறுமுகம் @ முர்த்திக்கும் கடந்த 2001 -ம் ஆண்டு திருமணம் நடைபெற்றதாகவும், இவர்களுக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் கவிதாவை அவரது கணவர் அடித்து கொடுமை செய்து வந்ததாகவும், கடந்த 19.06.2017 - ம் தேதி. கவிதா அவரது தம்பியான ராஜா @ முத்துச்செல்வனிடம். தொலைபேசியில் தொடர்புக் கொண்டு அவரது கணவர் அடித்துக் கொடுமை செய்வதாக கூறியதால், அவரது தம்பி ராஜா @ முத்துச்செல்வன், அவரின் உறவினர்களான செந்தில்குமார் மற்றும் கீர்த்திவாசன் ஆகியோரை அவரது அக்கா வீட்டிற்கு அழைத்து சென்றபோது, கவிதாவின் கணவர் ஆறுமுகம் @ முர்த்தி அருவாளால் கவிதாவின் கழுத்து மற்றும் தோள்பட்டையில் பலமாக தாக்கியதில் கவிதா சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக அவரது தம்பி ராஜா@முத்துச்செல்வன் கொடுத்த புகாரின் அடிப்படையில், கும்பகோணம் தாலுக்கா காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி வழக்கினை புலன்விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ராமமூர்த்தி வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான நாச்சியார் கோவில் கீழமாத்துரை சேர்ந்த ஆறுமுகம்@ முர்த்தி (வயது 56) என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரியின் மீது 15.09.2017-ம் தேதி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார். இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்த தஞ்சாவூர் மகிளா நீதிமன்ற நீதிபதி திருமதி.தமிழரசி (பொறுப்பு) 17.03.2026-ம் தேதி வழக்கின் எதிரியான நாச்சியார் கோவில் கிழமாத்துரை சேர்ந்த ஆறுமுகம்@ முர்த்தி (வயது-55) என்பவருக்கு ஆயுள் சிறைன மற்றும் ரூ.5,000/- அபராதத் தொகை விதித்து உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கில் திறம்பட பணிபுரிந்தமைக்காக அரசு வழக்கறிஞர் திருமதி. விஜயப்பிரியா, வழக்கின் தற்போதைய காவல் ஆய்வாளர் பாலசந்திரன் மற்றும் நீதிமன்றக் தலைமைக் காவலர் அருள்முரளி ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜாராம் வெகுவாக பாராட்டினார்கள்.

தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இராஜாராம் உத்தரவின் பேரில் 20.03.2026 ஆம் தேதியன்று தஞ்சாவூர் மாவட்ட மதுவிலக்கு அமல் பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் இளங்கோவன் ஜென்னிங்ஸ் தலைமையில் தஞ் சாவூர் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஆனந்திவேதவல்லி



மற்றும் மதுவிலக்கு காவல் ஆளிநர்கள் தீவிர மதுவிலக்கு வேட்டை நடத்தியதில் 20.03.2026 ஆம் தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் தாலுக்கா குருங்குளம் கிழக்கில் அமைந்துள்ள சண்முகம் என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் போலியாக தயார் செய்யப்பட்ட 243 லிட்டர் கள் மற்றும் அதனுடன் போலியாக கள் தயாரிக்க பயன்படுத்திய பெரிய பிளாஸ்டிக் குடங்கள்-12, 1லி பிளாஸ்டிக் பாட்டில்கள்-93, சர்க்கரை-4கி, உப்பு-1கி, கடலை மாவு-300 கிராம், சோடா உப்பு-1கி, புனல்-1, வடிகட்டி-3, உருண்டை வடிவிலான நமச்சாரம்- பூகி ஆகிய தடயப்பொருட்களுடன் குற்றச்சம்பவத்தில் ஈடுபட்ட எப்டாலின் வயது 64 த/பெ ராஜப்பா, ராஜாஜி நகர் முதல் தெரு, தில்லை நகர் கிழக்கு, விளார் ரோடு, தஞ்சாவூர் என்பவரையும் புண்ணியமுர்த்தி வயது 62 த/பெ கணேசன், 4/159, தெற்கு தெரு, வாண்டையார் இருப்பு, தஞ்சாவூர் ஆகிய இருவரையும் கைது செய்து தஞ்சாவூர் மதுவிலக்கு அமல் பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

... விமல்ராஜ், ராஜேஷ்

## திருநெல்வேலி மாவட்ட காவல்துறை செய்திகள்

திருநெல்வேலி, ஏப்ரல்

திருநெல்வேலி மாநகர காவல் துறையில் செயல்படும் மோப்ப நாய் பிரிவில் தற்போது வெடிகுண்டு வழக்கு துப்பறியும் அலுவலில் 02 மோப்ப நாய்களும் (1.ரெமோ, 2.கூப்பர்), குற்ற வழக்குகளை துப்பறியும் அலுவலில் 1 மோப்ப நாய் (பரணி), மற்றும் போதை பொருட்கள் துப்பறியும் அலுவலில் 1 மோப்ப நாய் (லக்கி) என 4 மோப்ப நாய்கள் அலுவலில் இருக்கின்றது.




இந்நிலையில் திருநெல்வேலி மாநகர துப்பறியும் மோப்ப நாய் பிரிவிற்கு குற்ற வழக்குகளை துப்பறியும் அலுவலுக்காக புதிதாக நாய் குட்டி ஒன்று வாங்கப்பட்டுள்ளது. 26.03.2026ஆம் தேதி புதிதாக வாங்கப்பட்ட நாய் குட்டிக்கு திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் இ.கா.ப., அவர்கள் ப்ரௌனி (Brownie ) என பெயர் சூட்டினார்கள். மேலும் மோப்ப நாய்களை நல்ல முறையில் பயிற்சி அளிக்கவும், நல்ல முறையில் பராமரிக்கவும் மோப்ப நாய் பிரிவு காவல் துறையினருக்கு அறிவுரை வழங்கினார்கள். உடன் காவல் துணை ஆணையர் திரு. விஜயகுமார் (கிழக்கு) மற்றும் காவல் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கடந்த 2023-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் லெட்சுமண குமார் (45) என்பவர் 4 வயது சிறுமியிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், சேரன்மகாதேவி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில், காவல்துறையினர் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, சேரன்மகாதேவி அனைத்து மகளிர் காவல் நிலைய முந்தைய காவல் ஆய்வாளர் திருமதி. அன்னபூரணி புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரியை கைது செய்தார். புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது, திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், குற்றவாளிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு,நீதிபதி திரு. சுரேஷ் குமார் அவர்களால் (26.03.2026) குற்றவாளிக்கு சாகும்வரை ஆயுள் சிறை தண்டனை மற்றும் ரூ. 5,000/- அபராதம் விதிக்கப்பட்டது. மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ. 3 லட்சம் நிவாரணத்தொகை வழங்க உத்தரவிட்டு தீர்ப்பளித்தார் இவ்வழக்கின் நீதிமன்ற விசாரணை துரிதமாக நடைபெற, சிறப்பாக கண்காணிப்பு செய்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. சண்முகம் (CWC) அவர்கள், சேரன்மகாதேவி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு. அஸ்வத் அன்டோ ஆரோக்கியராஜ் அவர்கள் மற்றும் சேரன்மகாதேவி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி. மங்கையர்கரசி அவர்களையும், வழக்கினை திறம்பட புலன் விசாரணை செய்த அப்போதைய சேரன்மகாதேவி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி. அன்னபூரணி (தற்போது தென்காசி மாவட்டம்) மற்றும் வழக்கின் விசாரணைக்கு உதவியாக இருந்த பெண் தலைமை காவலர் திருமதி. யாஸ்மின், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் திருமதி. உஷா அவர்களையும் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.M.பிரசண்ண குமார், IPS., அவர்கள் வெகுவாக பாராட்டினார். திருநெல்வேலி மாவட்ட காவல்துறை யினரின் தீவிர நடவடிக்கையால், இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 6 போக்சோ வழக்குகளில் ஈடுபட்ட 6 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு சீவலப்பேரியில், கோவில் திருவிழாவின் போது கடை வைத்து நடத்துவதில், ஏற்பட்ட பிரச்சனையின் முன்விரோதம் காரணமாக சீவலப்பேரியை சேர்ந்த பூசாரி சிதம்பரம் (எ) துரை (41) என்பவரை, அதே பகுதியைச் சேர்ந்த சரித்திர பதிவேடு குற்றவாளிகளான தங்கப்பாண்டி (29), பேச்சுக் குட்டி (29), முருகன் (28) மற்றும் பலர் சேர்ந்து சேர்ந்து, கொலை செய்தது தொடர்பாக, வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது, திருநெல்வேலி கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் (எண் - III) நடைபெற்று வந்த நிலையில், குற்றவாளிகளான தங்கப்பாண்டி, பேச்சுக் குட்டி மற்றும் முருகன் ஆகிய மூவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு நீதிபதி திரு. ராபின்சன் ஜார்ஜ் அவர்களால் (24.03.2026) குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டது. தண்டனை விவரம் பின்வருமாறு

- IPC 302 - ஆயுள் தண்டனை மற்றும் ரூ. 1,000/- அபராதம்
- IPC 506(ii) - 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ. 2,000/- அபராதம்
- IPC 148 - 2 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ. 1,000/- அபராதம் விதித்து தீர்ப்பினை வழங்கினார்.

மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய மூன்றாவது எதிரியான முருகனுக்கு கூடுதலாக - IPC 307 - 10 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ. 1000/- அபராதம் விதித்துள்ளார்.

மேலும், மேற்படி தண்டனைகளை குற்றவாளிகள் மூவரும் ஏக காலத்தில் அனுபவிக்க நீதிபதி அவர்கள் தனது தீர்ப்பில் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில், திறம்பட சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த திருநெல்வேலி ஊரக உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு. ரகுபதி ராஜா அவர்கள், சீவலப்பேரி காவல் ஆய்வாளர் திரு.சுபாஷ் மற்றும் சீவலப்பேரி காவல்துறையினரையும், இவ்வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த அப்போதைய காவல் ஆய்வாளர் திரு.பெருமாள் (தற்போது தென்காசி மாவட்டம்), வழக்கில் விசாரணைக்கு உதவி செய்த பெண் தலைமை காவலர் திருமதி. முத்து லெட்சுமி மற்றும் நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு வழக்கறிஞர் திரு. கதிரவன் அவர்களையும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. M.பிரசண்ண குமார், IPS., அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்டசுத்தமல்லி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் உதவி ஆய்வாளர் திரு. சினேகாந்த் அவர்கள் தலைமையிலான காவல்துறையினர் கொண்டாநகரத்திலிருந்து திருப்பணி கரிசல்குளம் செல்லும் ரோட்டின் அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, சந்தேகத்திற்கு இடமான வகையில் இருசக்கர வாகனத்தில் வந்த பாவூர்சத்திரத்தை சேர்ந்த பாலமுருகன் (38), பிரானூர், வல்லம் பகுதியை சேர்ந்த கைக்கொண்டான் (46) ஆகிய இருவரையும் சோதனை செய்து பார்த்த போது, அரசால் தடை செய்யப்பட்ட 44 கிலோ 130 கிராம் புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. இதுகுறித்து சுத்தமல்லி உதவி ஆய்வாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இருவரையும் கைது செய்தார். மேலும் அவர்களிடமிருந்து 44 கிலோ 130 கிராம் புகையிலை பொருட்களையும், இரண்டு இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றி உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

... சங்கரன்

## தேனி மாவட்ட காவல்துறை செய்திகள்

தேனி, மார்.


தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் மத்திய பாதுகாப்பு படையினருடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா ப்ரியா, இ.கா.ப., அவர்கள் தலைமையில் மத்திய பாதுகாப்பு படையினருடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இதில் தேர்தல் காலத்தில் மத்திய பாதுகாப்பு படையினர் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் விதிமுறைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள், ரோந்து பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும், தேர்தல் பணிகள் முழுமையாக சீராக நடைபெறவும், பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் சூழலை உருவாக்கவும் காவல்துறையினரும் மத்திய பாதுகாப்பு படையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026 முன்னிட்டு தேனி மாவட்டம், ஆண்டிபட்டி உட்கோட்டம், கடமலைக்குண்டு பகுதிகளில் கொடி அணிவகுப்பு. தேனி மாவட்டத்தில் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026 முன்னிட்டு பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக



வாக்களிக்கவும், தேர்தல் காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலையை பாதுகாப்பாக நிலைநிறுத்தவும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா ப்ரியா, இ.கா.ப., அவர்கள் உத்தரவின் பேரில் ஆண்டிபட்டி உட்கோட்டம், கடமலைக்குண்டு பகுதிகளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. கலைக்கதிரவன் அவர்கள் தலைமையில் காவல்துறையினர் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் இணைந்து கொடி அணிவகுப்பு மேற்கொண்டனர்.

தேனி மாவட்ட SJ மற்றும் HR (Social Justice & Human Rights) பிரிவின் சார்பில், 13.03.2026 அன்று வீரபாண்டியில் அமைந்துள்ள சௌராஷ்டிரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசு நலத்திட்டங்கள், தீண்டாமை ஒழிப்பு, கல்வியின் முக்கியத்துவம், இணையக் குற்றங்களை தவிர்க்கும் வழிமுறைகள், சுகாதாரம் மற்றும் நல்ல ஒழுக்கம் குறித்து மாணவ-மாணவிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும் போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் மற்றும் குழந்தை திருமணத்தைத் தடுக்கும் அவசியம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.



இந்த நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாகம், பேராசிரியர்கள் மற்றும் மாணவ-மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் Dr. V. சசிமோகன், இ.கா.ப., அவர்கள் (13.03.2026) தேனி மாவட்டத்திற்கு வருகை தந்து உத்தமபாளையம் மற்றும் போடி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது அலுவலக பதிவேடுகள், நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் காவல் நிர்வாக செயல்பாடுகள் குறித்து விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. மேலும் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களிடம் சட்டம் மற்றும் ஒழுங்கை சிறப்பாக பேணுதல், குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துதல் ஆகியவை குறித்து தேவையான அறிவுரைகள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து, வருகின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு காவல்துறையினர் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடி, தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கினார்.

... வடிவேல்

## பெரம்பலூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

பெரம்பலூர், ஏப்ரல்

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் காவல்துறை யினர் இணைந்து கொடி அணிவகுப்பு நடத்தப்பட்டது.



பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற உள்ள தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, 17.03.2026-ம் தேதி பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.அனிதா அவர்களின் தலைமையில் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் மாவட்ட காவல்துறையினர் இணைந்து கொடி அணிவகுப்பு நடத்தினர். இந்த அணிவகுப்பை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள். பின்னர் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் காவல்துறையினர் பெரம்பலூர் ரோவர் ஆர்ச் முதல் பாலக்கரை, துறைமங்கலம் வரை அணிவகுப்பு நடைபெற்றது. இந்த நிகழ்வின் மூலம் தேர்தல் காலத்தில் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு உறுதிசெய்யப்படுவதுடன், பொதுமக்கள் அமைதியான மற்றும் சுதந்திரமான சூழலில் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. மேலும் தேர்தல் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது. இந்த நிகழ்வில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பாலமுருகன் (மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு), பெரம்பலூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு. ரவிச்சந்திரன், ஆயுதப்படை துணை காவல் கண்காணிப்பாளர் திரு. சுப்பையன் மற்றும் எல்லையோர பாதுகாப்பு படையின் அதிகாரி திரு.சிவகாந்த் பாத்தியா மற்றும் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் காவல்துறையினர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

... உதயசூரியன்

## கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை செய்திகள்

கள்ளக்குறிச்சி, ஏப்ரல்

இருவரை சரமாரியாக வெட்டி விட்டு தப்பியோட்டம். படுகாயமடைந்த இருவருக்கும் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை" என தகவல் பரவி வருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரனை மேற்கொண்டதில் கள்ளக்குறிச்சி நகரம் சிவன் கோவில் தெருவைச் சேர்ந்த செல்வம் மகன் கருப்பு (எ) மணிகண்டன் என்பவரின் நண்பர் ஏமப்பேரை சார்ந்த சேர்ந்த மாயக்கண்ணன் மகன் ஆதித்யன் என்பவருக்கும் முன்விரோதம் உள்ளதாகவும் 22.03.2026 அன்று கள்ளக்குறிச்சி பகுதியில், மணிகண்டன் என்பவர் மீது மேற்குறிப்பிட்ட ஆதித்யன் உள்ளிட்ட 4 நபர்கள், 2 இருசக்கர வாகனங்களில் வந்து, இரும்புக் கம்பியால் அவரது தலையின் பின்பகுதியில் தாக்குதல் நடத்தியுள்ளதும் இதில் அவர் காயமடைந்து 5 தையல்கள் போடப்பட்டு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதும் தெரியவருகிறது. இச்சம்பவத்திற்கு பின்னணியாக, முன்பு இரண்டு பள்ளி மாணவர்களை ஆதரித்து ஏற்பட்ட பிரச்சினையால், காயமடைந்த மணிகண்டன் மற்றும் ஆதித்யன் இடையே விரோதம் உருவாகி, பின்னர் வாய்த்தகராறு ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாக இந்த தாக்குதல் நிகழ்ந்துள்ளதும் விசாரனையில் தெரியவருகிறது. இச்சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஒருவர் உடனடியாக கைது செய்யப்பட்டு மீதமுள்ள குற்றவாளிகளை கைது செய்ய சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் 10 பேர் கொண்ட கும்பல் 2 பேரை தாக்கியது என்ற வகையில் பரவி வரும் செய்திகள் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகும். மேற்படி வழக்கு புலன் விசாரனையில் உள்ள நிலையில், மேற்கொண்டு எந்தவிதமான சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனையும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

12.03.2026-ந் தேதி நடைபெற்ற தமிழ்நாடு துணை முதல்வர் அவர்கள் வழிப் பாதுகாப்பு பணியில் சிறப்பாக பணியாற்றிய தலைமை காவலர் திரு.சுக்கிரன் மற்றும் காவலர் திரு.ஆஷித் ஆகிய இருவரையும் நேரில் அழைத்து பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். இக்கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு.சரவணன், திரு.திருமால், அனைத்து துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், காவல் உதவி ஆய்வாளர்கள், மற்றும் காவல் நிலைய பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் தேர்தல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கொடி அணிவகுப்பு பேரணி நிகழ்ச்சி நடைபெற்றது.

13.03.2026-ந் தேதி கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் விழுப்புரம் சரக காவல்துறை துணைத் தலைவர் திரு.அர.அருளரசு இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அரவிந்த், அவர்கள் தலைமையில் மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில் குற்ற வழக்குகள் குறைப்பது குறித்தும், கோப்புக்கு எடுக்காத வழக்குகள் குறித்தும், உடனடியாக முடிக்க வேண்டிய வழக்குகள் குறித்தும், காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தற்போதைய நிலை குறித்தும், நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகள் குறித்தும் கேட்டறிந்தனர். மேலும் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கவும், கைது செய்யக்கூடிய வழக்குகளில் தலைமறைவு குற்றவாளிகளை உடனுக்குடன் கைது செய்யவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய தீர்வு விரைவாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பொதுமக்கள் கொடுக்கும் புகார்கள் மீது உடனடி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார்கள்,




13.03.2026-ந் தேதி மாலை 06.30 மணிக்கு உளுந்தூர்பேட்டையில் வரும் தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அரவிந்த், அவர்கள் தலைமையில் தேர்தலில் பொதுமக்கள் அச்சமின்றியும், விழிப்புணர்வுடனும் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக மாவட்ட காவல்துறையினர் மற்றும் மத்திய பாதுகாப்புப்படையினர் இணைந்து கொடி அணிவகுப்பு நிகழ்ச்சி உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்திலிருந்து தொடங்கி உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம், ஜிகூஷிழி ரோடு, காயிதே மில்லத் தெரு, நாராயண தியேட்டர் பேருந்து நிறுத்தம் சென்று மீண்டும் உளுந்தூர்பேட்டை காவல் நிலையம் வந்து நிறைவடைந்தது. இப்பேரணியில் துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன், உளுந்தூர்பேட்டை துணைக் காவல் கண்காணிப்பாளர், மத்திய பாதுகாப்பு படையினர், காவல் ஆய்வாளர்கள் காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநார்கள் கலந்து கொண்டனர்.



02.03.2026-ந் தேதி கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அரவிந்த், அவர்கள் முன்னிலையில் மாவட்ட காவல் நிலையங்களில் பறிமுதல் செய்யப்பட்டு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா போன்ற புகையிலை பொருட்கள் அழிக்கப்பட்டன, கீழ்குப்பம், மணலூர்பேட்டை மற்றும் ரிஷிவந்தியம் காவல் நிலையங்களில் கடந்த காலங்களில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை கடத்தியது மற்றும் விற்பனை செய்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட பல்வேறு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு சுமார் 4,894 கிலோ புகையிலை பொருட்களை அழிக்க நீதிமன்ற உத்தரவு பெற்று கள்ளக்குறிச்சி கூடுதல் காவல் கண்காணிப்பாளர், கள்ளக்குறிச்சி உணவு பாதுகாப்பு துறை அலுவலர் மற்றும் சின்னசேலம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் மேற்பார்வையில் சின்னசேலம் பேரூராட்சிக்கு உட்பட்ட குப்பை கிடங்கில் குழி தோண்டி முறையாக அழிக்கப்பட்டன.



...முரளி

## ஈரோடு மாவட்ட காவல்துறை செய்திகள்

ஈரோடு, ஏப்ரல்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை காவல் நிலையத்திற்குட்பட்ட விஜயமங்கலம், மேட்டுப்புதூரில் உள்ள டாஸ்மாக் கடையின் பாரில் டாஸ்மாக் கடை பூட்டப்பட்டு உள்ள நேரங்களில் சட்ட விரோதமாக அதிக விலைக்கு மதுபானங்கள் விற்பனை செய்து வருவதாக, பாஸ்ட் இந்தியா நியூஸ் 100 (தனியார்) இன்ஸ்டாகிராம் வீடியோவில் வெளியான செய்தியின் அடிப்படையில் பெருந்துறை காவல் நிலைய போலீஸார் மேற்படி இடத்திற்கு சென்று சோதனை மேற்கொண்டதில், திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர், தென்னம்பட்டி, ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த காலிராஜ் மகன் அன்புராஜ் (33) என்பவர் அதிக விலைக்கு சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்து வந்ததை கண்ட போலீஸார் அன்புராஜை கைது செய்து 12 மதுபாட்டில்களை பறிமுதல் செய்தும், வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் இதுபோன்று சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடுவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சத்தி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்த போக்சோ குற்ற வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சென்னிமலை, அம்மாபாளையம், எஸ்.சி.காலனியை சேர்ந்த பாபு (31), த/பெ மணி (லேட்), அரசு மருத்துவமனை அருகில், குமரன்கரடு, சத்தியமங்கலம் என்பவரை கடந்த 23.04.2025 ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது.மேற்படி வழக்கின் விசாரணையானது ஈரோடு மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் 16.03.2026 தேதி மேற்படி குற்றவாளியான பாபுவிற்கு வழக்கில் 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதம் விதித்தும், மேலும் பாதிக்கப்பட்ட இரண்டு சிறுமிகளுக்கும் அரசு சார்பில் தலா ரூ 3,00,000/- நிவாரண தொகையாக வழங்கவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட மேட்டுக்கடையில் உள்ள சந்தோஷ் என்பவருக்குச் சொந்தமான வீட்டில் மூன்று சூடான் நாட்டினரும், வேப்பம்பாளையம், அம்மன் நகரில் உள்ள முரளிகாந்த் என்பவரது வீட்டில் ஒரு நைஜீரியா நாட்டினரும் மற்றும் வெள்ளோடு காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட அத்தப்பாளையம், ஐத்ரேயா நகரில் உள்ள ஜெகநாதன் என்பவருக்கு சொந்தமான வீட்டில் ஒரு நைஜீரியா நாட்டினரும் வாடகைக்கு குடியிருந்து கொண்டு, மேல்படிப்பிற்காக வெளிநாட்டிலிருந்து வரும் மாணவர்களுக்கு ஏஜென்டாகவும் மற்றும் திருப்பூரில் பின்னலாடைகளை வாங்கி, ஏற்றுமதி தொழில் செய்து வருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், வெள்ளோடு காவல் நிலைய போலீஸார் சோதனை மேற்கொண்டதில், சந்தேகப்படும்படியாக குடியிருந்து வந்த சூடான் மற்றும் நைஜீரியா நாட்டை சேர்ந்த ஐந்து நபர்களை பிடித்து நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்ததில், 1. பஷார் கமால் மொகோப் முகம்மது (36), த/பெ. கமால், சூடான். 2. முகம்மது எல்பெய்த் எல்தேகனி அபிட் எல்காடிர் (42), த/பெ. எல்பெய்த், சூடான். 3. அமீர் (38), த/பெ. யாகியா ஓமர், சூடான். 4. அடிஜெ இப்பியாமாயில் ஜஸ்டின் (35), த/பெ. அடிடி அடாக்பம் வீதி, அபுஜா, நைஜீரியா. 5. மெபநெட்டோ லினஸ் எபமேரே (46) த/பெ லினஸ், நைஜீரியா. ஆகிய சூடான் மற்றும் நைஜீரியா நாட்டை சேர்ந்தவர்கள் முறையான ஆவணங்கள் இன்றி தங்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்கண்ட ஐந்து நபர்களையும் மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவின் பேரில், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் உள்ள வெளிநாட்டினருக்கான சிறப்பு முகாமில் உரிய பாதுகாப்புடன் கொண்டு சென்று ஒப்படைக்கப்பட உள்ளனர் என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மொடக்குறிச்சி தாசில்தார், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மொடக்குறிச்சி போலீஸார் ஆகியோர் ஓலப்பாளையம் கிராமத்தில் சத்தியமூர்த்தி என்பவருக்கு சொந்தமான கரும்பு தோட்டத்தில் கரும்பு வெட்டும் கூலி வேலை செய்து வந்த வடமாநில தொழிலாளர்களை விசாரித்த போது, மத்தியபிரதேசம் மாநிலத்திலிருந்து 24 நபர்கள், மகாராஷ்டிரா மாநிலம், சோலாப்பூர், போட்வாடி கிராமத்தைச் சேர்ந்த சதாசிங் மகன் யுவராஜ் சதாசிங் ஷிண்டே என்ற ஏஜென்ட் மூலம் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கரும்பு தோட்டங்களில் கரும்பு வெட்டும் கூலி வேலைக்காக, கடந்த 22.02.2026-ம் தேதி வந்ததாகவும், இதில் மேற்கண்ட மத்தியபிரதேசம் மாநிலத்தை சேர்ந்த 24 தொழிலாளர்களுக்கு சரிவர சம்பளம் தராமலும், தங்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பாமாலும் இருப்பதாக கூறிய தகவலின் அடிப்படையில் 4 சிறுமிகள் மற்றும் 3 சிறுவர்கள் உட்பட 24 தொழிலாளர்களையும் கடந்த 07.03.2026 ம் தேதி ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் தலைமையில் வருவாய் துறையினர், தொழிலாளர் நலத்துறை மற்றும் காவல்துறையினர் மீட்டனர். மேலும் கோட்ட வருவாய் அலுவலரின் எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் அடிப்படையில், ஏஜென்ட்டான யுவராஜ் சதாசிங் ஷிண்டே மீது கொத்தடிமை தடுப்பு சட்டம், குழந்தை தொழிலாளர் தடுப்பு சட்டம் மற்றும் வன்கொடுமை தடுப்பு சட்டங்களின் பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு கோபி மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் உட்கோட்ட நிர்வாக அலுவலர் மற்றும் கோட்ட வருவாய் அலுவலரின் பரிந்துரையின் பேரில், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேற்கண்ட 24 வடமாநில தொழிலாளர்களுக்கும் தலா ரூ.30,000/- வீதம் நிவாரண தொகையாக மொத்தம் ரூ.7,20,000/- ரூபாயை மாவட்ட கருவூலத்தில் இருந்து அவர்களது தனிப்பட்ட வங்கி சேமிப்பு கணக்கில் செலுத்தப்பட்டது. மேலும் மீட்கப்பட்ட 24 வடமாநிலத் தொழிலாளர்களை கடந்த 10.03.2026 ம் தேதி ஈரோட்டிலிருந்து வருவாய் துறை ஆய்வாளர் மற்றும் காவலர்கள் பாதுகாப்புடன் ஈரோடு இரயில் நிலையத்திலிருந்து மத்திய பிரதேசம் மாநிலம், பெட்டுல் மற்றும் ஹர்தா மாவட்ட ஆட்சியர்களிடம் ஒப்படைக்க ரப்திசாகர் விரைவு இரயிலின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். கடந்த 11.03.2026 ம் தேதி இரவு பெட்டுல் இரயில் நிலையத்திற்கு சென்ற தொழிலாளர்களை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் வசம் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் மூலம் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவில் கடந்த 13.01.2026 ம் தேதி, கருங்கல்பாளையத்தில் உள்ள நாடார் முன்னேற்ற சங்க அலுவலகத்தில் மாதாந்திர ஏலச்சீட்டு நடத்தி வந்த ராஜேந்திரன் (67), த/பெ ராமசாமி நாடார், 121/3, கமலா நகர், கருங்கல்பாளையம் மற்றும் ராஜேந்திரனின் மகன் செந்தில்குமார் (43) ஆகியோர் ஏலத்தில் உறுப்பினரான கருங்கல்பாளையம், குயிலான் தோப்பு 3வது வீதியைச் சேர்ந்த மான்ராஜா மகன் செல்வக்குமார் (54) என்பவருக்கு ஏலத்தில் எடுத்த பணம் ரூ 10,56,840/- ஐ தராமலும் மற்றும் ஏலச்சீட்டில் சேர்ந்திருந்த வாடிக்கையாளர்களின் பல லட்ச ரூபாய் பணத்தை ஏமாற்றிவிட்டு தலைமறைவாகி விட்டதாக மேற்படி ஏலச்சீட்டு நடத்தியவர்கள் மீது செல்வக்குமார் கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட குற்ற பிரிவு போலிசார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் பணத்தை ஏமாற்றி விட்டு தலைமறைவான ராஜேந்திரன் மற்றும் செந்தில்குமார் ஆகிய இருவரையும், 11.03.2026 ம் தேதி கைது செய்து, மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

... பாலசந்திரன்

## செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை செய்திகள்



செங்கல்பட்டு, ஏப்ரல்

செங்கல்பட்டு மாவட்ட காவல் அலுவலகத்தில் (20.03.2026)ம் தேதி காலை 11 மணிக்கு வருகின்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டத்தின் போலீஸ் அப்சர்வர் திருமதி. ப்ரீத்தி பிரியதர்ஷினி. இ.கா.ப., அவர்களின் தலைமையில் சட்டம் ஒழுங்கு சம்பந்தமான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இதில், செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. அய்மன் ஜமால். இ.கா.ப., தாம்பரம் காவல் துணை ஆணையர் திரு. பவன் குமார் ரெட்டி. இ.கா.ப., பள்ளிக்கரணை காவல் துணை ஆணையர் திரு. பொன் கார்த்திகேயன்., புனித தோமையார்மலை காவல் துணை ஆணையர் திரு. சீனிவாசன்., அடையாறு காவல் துணை ஆணையர் திரு. கார்த்திகேயன்., மற்றும் சம்பந்தப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள், உதவி ஆணையர்கள் ஆகியோர் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்ட காவல் அலுவலகத்தில் (16.03.2026) ம் தேதி செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. அய்மன் ஜமால். இ.கா.ப., அவர்களின் தலைமையில் மாதாந்திர குற்ற ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் அருகிலுள்ள மடையம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிக்கு, ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த நிர்வாகி பாலியல் தொந்தரவு கொடுத்ததாகவும், அதனைத் தொடர்ந்து அளிக்கப்பட்ட புகாரின் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற செய்தி சமூக வலைதளங்களில் பரவிவருகிறது. கடந்த 17.03.2026-ம் தேதி காவல் துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், உடனடியாக பாதிக்கப்பட்டதாக கூறப்படும் மாணவி படிக்கும் பள்ளிக்குச் சென்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர், பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பள்ளி மாணவி மற்றும் அவரது தந்தை ஆகியோரிடம் விசாரணை செய்து பெறப்பட்ட எழுத்து மூல வாக்குமூலத்தின் அடிப்படையில், மேற்படி செய்தியானது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்றும், இரு தனிப்பட்ட நபர்களுக்கு இடையேயான முன்விரோதம் காரணமாக இச்செய்தி சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டது தெரியவந்தது. எனவே. சமூக வலைதளங்களில் பரவி வரும் இத்தகைய தவறான செய்திகளை பொதுமக்கள் யாரும் நம்பவேண்டாம் என்றும், அவற்றை பகிர்வதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான தகவல்களை பரப்புபவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் துறை சார்பாக எச்சரிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகே 09.03.2026 ஆம் தேதி இரவு சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக வெளிவந்த செய்தி தொடர்பாக கீழ்கண்ட தகவல் தெரிவிக்கப்படுகிறது

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகே பாதிக்கப்பட்ட சிறுமி தன்னுடைய இரு நண்பர்களுடன் அதில் ஒருவரின் சொந்த ஊரான கீழக்கெண்டை கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தபோது அவர்களை பின் தொடர்ந்து வந்த இரு மர்ம நபர்களால் தாக்கப்பட்டு அதன் பின்னர் அந்தச் சிறுமி மீது பாலியல் வன்புணர்வு நடைபெற்றதாக பாதிக்கப்பட்ட சிறுமி அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் மேல்மருவத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இச்சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளில் முக்கிய குற்றவாளியான ஆவடி பகுதியை சேர்ந்த காக்கா பாலாஜி @ பாலாஜி கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இச்சம்பவத்தில் தொடர்புடைய மற்றொரு குற்றவாளியை கைது செய்ய மூன்று காவல் ஆய்வாளர்கள் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சம்பவம் குறித்து காவல்துறைக்கு தகவல் கிடைக்கப்பெற்ற 24 மணி நேரத்தில் விரைவான புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார்.

...உதவிஆசிரியர் டேனியல், நிருபர் பிரவீன்குமார்

## சென்னை மாவட்ட காவல்துறை செய்திகள்



சென்னை, ஏப்ரல்

சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் பொதுமக்களிடம் 23 புகார் மனுக்களை பெற்று, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சாலைகளில் வாகன சாகசங்களில் ஈடுபடுவது மற்றும் ஆபத்தான முறையில் வாகனங்களை ஓட்டும் போக்கைக் கட்டுப்படுத்த சிறப்பு




நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய செயல்கள் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பதோடு, வாகன ஓட்டிகளுக்கும் மற்ற சாலைப் பயனாளர்களுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன. கடந்த வாரம், மூலக்கடை பகுதியில் 12 நபர்களும், பெரம்பூர் முரசொலி மாறன் மேம்பாலத்தில் 2 நபர்களும் பொதுமக்களுக்கு இடையூறு மற்றும் ஆபத்து ஏற்படும் வகையில் தங்களது இருசக்கர வாகனங்களை அதிவேகமாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டியது கண்டறியப்பட்டது. இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. அருண் இ.கா.ப. அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கூடுதல் காவல் ஆணையாளர் (போக்குவரத்து) திரு. கார்த்திகேயன், இ.கா.ப. அவர்களின் மேற்பார்வையிலும், பொதுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிப்பவர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க தனிப்படை அமைக்கப்பட்டது. இது தொடர்பாக அளிக்கப்பட்ட முறையான புகார் மற்றும் அடையாளம் காணப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் அடிப்படையில், கொளத்தூர் மற்றும் புளியந்தோப்பு போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையின் அடிப்படையில், இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய 10 நபர்களை தனிப்படை போலீசார் கைது செய்து, 9 மோட்டார் சைக்கிள்களை பறிமுதல் செய்துள்ளனர். மேலும், இதில் தொடர்புடைய 4 சிறுவர்கள் அவர்களது பெற்றோருடன் வரவழைக்கப்பட்டு, அவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பொதுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலோ அல்லது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையிலோ வாகனங்களை இயக்குபவர்கள் மீது தொடர் கண்காணிப்பு மற்றும் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

வில்லிவாக்கம் காவல் நிலையம்... தந்தை மற்றும் மகனை கத்தியால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட 5 நபர்கள் கைது.

திருவான்மியூர் காவல் நிலையம்... வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து திருட முயன்ற சரித்திரப்பதிவேடு குற்றவாளி கைது.

பேசின்பாலம் காவல் நிலையம்... சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த பெண் கைது. 30 மது பாட்டில்கள் பறிமுதல்.

இராயப்பேட்டை காவல் நிலையம்... கொலை முயற்சி வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பெண் கைது.

கிண்டி காவல் நிலையம்... தகராறில் ஒருவரை கட்டையால் தாக்கிய நபர் கைது. 2012 ஆம் ஆண்டு நடந்த ஆட்டோ ஓட்டுநர் கொலை வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் சிறை தண்டனை மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து 4வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு.

கொடுங்கையூர் காவல் நிலையம்... சட்டவிரோதமாக மதுபாட்டில்களை விற்பனை செய்த நபர் கைது. 40 மது பாட்டில்கள் மற்றும் பணம் பறிமுதல்.

மீனம்பாக்கம் காவல் நிலையம்... மெக்கானிக் கடை ஊழியரை தாக்கிய சக ஊழியர் கைது.

CMBT காவல் நிலையம்... கோயம்பேடு பகுதியில் நடந்து சென்ற நபரை மிரட்டி பணம் பறித்துச் சென்ற 2 நபர்கள் கைது. பணம் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல்.

கோட்டூர்புரம் காவல் நிலையம் இரட்டை கொலை வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி கைது.

பூக்கடை காவல் நிலையம்... பாரிமுனை பகுதியில் கத்தியால் தாக்கி பணம் மற்றும் செல்போன் பறித்துச் சென்ற ஒருவர் கைது. ஒரு இளஞ்சிறார் சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர்.

நுங்கம்பாக்கம் காவல் நிலையம்... ஆட்டோ ஓட்டுநரிடம் தகராறு செய்து கல்லால் தாக்கிய நபர் கைது.

ஓட்டேரி காவல் நிலையம்... கள்ளசாவி போட்டு வீட்டை திறந்து திருடிய பெண் கைது. 97.7 கிராம் தங்க நகைகள், 256 கிராம் வெள்ளி பொருட்கள் மற்றும் பணம் ரூ.1.55 லட்சம் மீட்பு.

திருவல்லிக்கேணி காவல் நிலையம்... நடந்து சென்ற நபரை தாக்கி பணம் பறித்துச் சென்ற சரித்திர பதிவேடு குற்றவாளி உட்பட 3 நபர்கள் கைது.

கே. கே. நகர் காவல் நிலையம்... ஒருவரிடம் வீண் தகராறு செய்து கல்லால் தாக்கிய நபர் கைது.

புது வண்ணாரப்பேட்டை காவல் நிலையம்... காலியாக உள்ள பழைய குடியிருப்பில் காப்பர் ஒயர்களை திருடிய நபர் கைது. சுமார் 3 கிலோ காப்பர் ஒயர்கள் மீட்பு.

முத்தியால்பேட்டை காவல் நிலையம்... பூட்டியிருந்த பெட்டிக்கடையின் பூட்டை உடைத்து பணம் திருடிய நபர் கைது. பணம் மீட்பு.

சாஸ்திரி நகர் காவல் நிலையம்... நிறுத்தியிருந்த ஆட்டோவில் இருந்து பேட்டரியை திருடிய நபர் கைது. பேட்டரி மீட்பு.

விருகம்பாக்கம் காவல் நிலையம்... ஏசி சர்வீஸ் செய்ய சென்ற வீட்டில் 2 தங்க காப்புகளை திருடிய நபர் கைது.35 கிராம் எடை கொண்ட 2 தங்க காப்புகள் பறிமுதல்.

மாதவரம் காவல் நிலையம்... ஆடு வாங்கி விற்கும் தொழிலில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்று கூறி, பணம் ரூ.87 லட்சம் பெற்று, மோசடி செய்த வழக்கில் மேலும் ஒருவர் கைது.

குமரன் நகர் காவல் நிலையம்... வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற இருவர் கைது. இருசக்கர வாகனம் மீட்பு.

வானகரம் மற்றும் விருகம்பாக்கம் காவல் நிலையம்... மாஞ்சா நூல் பயன்படுத்தி காற்றாடி பறக்க விட்ட மற்றும் விற்பனை செய்த 3 நபர்கள் கைது. 1 இளஞ்சிறார், சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர். சுமார் 450 காற்றாடிகள் மற்றும் மாஞ்சா நூலுடன் கூடிய 6 லொட்டாய்கள் பறிமுதல்.

அபிராமபுரம் காவல் நிலையம்... வீட்டில் உள்ள பாத்ரூம் உபகரணங்களை திருடிச் சென்ற சரித்திர பதிவேடு குற்றவாளி கைது. தண்ணீர் குழாய் மற்றும் 2 பாத்ரூம் ஷவர் மீட்பு.

ஐ.சி.எப். காவல் நிலையம்... ஆட்டோவில் பயணம் செய்த நபர்களை மிரட்டி பணம் பறித்துச் சென்ற ஆட்டோ ஓட்டுநர் கைது. ஆட்டோ மற்றும் செல்போன் பறிமுதல்.

நொளம்பூர் காவல் நிலையம்... கடன் செலுத்தாமல் ஜப்தி செய்யப்பட உள்ள வீட்டை குத்தகைக்கு விட்டு ரூ.20 லட்சம் பணம் பெற்று மோசடி செய்த நபர் கைது.

அண்ணா சாலை காவல் நிலையம்... லாட்ஜில் தங்கியிருந்த நபரின் செல்போன் மற்றும் மடிக்கணினியை திருடிச் சென்ற நபர் கைது. செல்போன் மற்றும் மடிக்கணினி மீட்பு.

... காதர் மொகைதீன், கதிரவன், சக்திவேல், சுரேஷ், இளவரசன்

Editor & Publisher : **R.SRIDHAR**, 7/5, Muthu Devar Street, M K Puram, Subramaiapuram Post, Madurai, Tamil nadu - 625011. Printer by Meera Offset Printers, 104, Venkatrangam Pillai Street, Triplicane, Chennai, Tamil Nadu - 600005.